1968 மார்ச் 6]

(இ) 10 மெக்கர்வாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் அளவுக்கு வசதியுள்ள இடங்களையும் பயன்படுத்தும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) நான்காம் திட்டக் காலத்தில் மின்சாரப் பணிகளுக்கென ரூ. 175·56 கோடி ஒதுக்கீடு செய்ய இவ்வரசு நினைத்துள்ளது. நான்காம் திட்டக்கால இறுதிக்கு கிர்ட்டின் (Grid) அமைப்புத் திறனை 1,079 M. W. இருந்து 1,805 M.W.-க்கு உயர்த்தவும் நினைத்துள்ளது. இம் மாநிலத்தின் மொத்த அமைப்புத் திறனை 2,515 M. W.-க்குக் கொண்டுவர, நெய்வேலி அனல் மின் நிலையத்தின் திறனையும் 600 M.W. -க்கு உயர்த்தப்படும்.

(இ) அதிக உற்பத்தித் திறனும், வருவாயும் தரும் பெரிய திட்டங்களை முடித்த பின்னர், சிறிய நீர் மின்சாரத் திட்டங்களின் ஆராய்ச்சி கவனிக்கப் படும்.

*151 **வினா—திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் அனல் மின் விசை நிலையங்கள் எத்தனை ? எங்கெங்கே இயங்குகிறது ?

(இ) மின்சார உற்பத்தியை அதிகப்படுத்த அனல் மின்விசை நிலையங் களை அதிகப்படுத்தும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) மூன்று—சென்னை, சமயநல்லூர், நெய்வேலி ஆகிய இடங்களில்.

(இ) அனல் மின்விசை நிலையங்களை அதிகப்படுத்தும் கொள்கையை ஏற்கனவே ஏற்று, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : ஒரு பக்கம் அதிகப்படியாக மின் சாரம் உற்பத்தியாகியும், நெய்வேலியில் உற்பத்தியாகிற மின்சாரம் முழு வதையும் சில சமயங்களில் எடுத்துக் கொள்ளவில்லை என்கிற குறை இருக்கிறது. மற்றொரு பக்கம் மின்சாரம் உற்பத்திக்கு மூலதனச் செலவு ஒரு ரூபாயாகவும், விஸ்தரிப்பதற்கு ரூ. 2½ ஆகவும் கணக்கிடப்பட்டிருப்ப தால், உற்பத்தியை அதிகரித்துக் கொண்டே போவதை விட்டுவிட்டு, ஏற்கனவே உற்பத்தியாகிற மின்சாரத்தை விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அவ்வப்பொழுது இருக்கிற தேவையைக் கணக்கிட்டுத்தான் நாம் அதைப் பயன்படுத்திக் கொண்டு வருகிறோம். குறிப்பிட்ட காலத்தில், மழை காலத் தில் எங்கு பார்த்தாலும் உற்பத்தி ஏற்படுகிறபொழுது, நெய்வேலியி லிருந்து எடுக்கிற திறன் குறைந்துவிடுகிறது. குறைந்த அளவு இவ்வளவு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கூறியதற்கு இணங்க 1969–70 வரை ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டப்படி நெய்வேலியிலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மின்சாரம் எடுக்கப்பட்டு வருகிறது. இப்பொழுது நம்முடைய மாநிலத் தேவையை நிறைவேற்று வதற்குக் கூட அண்மையில் மைசூர் மாநிலத்தோடு ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறோம். அவர்களோடு நீர் மின்சாரம் பெறுவதற்கு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறோம். ஒரு மிலியன் மெகவாட் வரையில் 5 காசு என்றும், அதற்கு மேல் எடுக்கப்படுவதற்கு 4½ காசு என்றும் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட அனல் மின்சாரம் உற்பத்தியாகிற விலைக்கு ஈடாக அந்த விலை வருகிற காரணத்தினால், நிலக்கரி நாட்டுக்கு மிகத் தேவை என்று நினைத்து, அதே அளவுக்கு உற்பத்திச் செலவுக்குக் கிடைக்கிற நீர் மின்சாரத்தை மைசூர் மாநிலத்தி லிருந்து நாம் பெறுகிற முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறோம். ஆனால், அவ்வப்பொழுது தேவையின் அடிப்படையில் உற்பத்தியை நாம் பெருக்கிக் கொண்டு வருகிறோம்.

திரு. மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டத்திற்கு 1967–68-ம் ஆண்டில் தமிழக அரசு ரூ. 10 லட்சம் டோகன் கிராண்டாக ஒதுக்கியும்கூட, மத்திய அரசு அந்தத் திட்டத்திற்கு அனுமதி மறுத்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் உணர்வார்களா? அந்தத் திட்டத்தை அமல் நடத்துவதற்கு தமிழக அரசு வற்புறுத்தி, அதற்கு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் 110 மெகவாட் கொடுக்கின்ற ஒரு அனல் மின்சார நிலையம் உருவாக்கலாம் என்று அரசு யோசித்திருந்தது. அதே நேரத்தில் 110 மெகவாட் அனல் மின்சார உற்பத்தியை எண்ணூரோடு இணைத்தால் அதற்காகிற செலவு குறைக்கப்படும். இவை விரிவு படுத்தினால் செலவைக் குறைக்கலாம் என்று மத்திய அரசுக் குழு யோசனை தெரிவித்திருக்கிறது. இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில், தூத்துக்குடி அனல் மின்சார நிலையத்தில் உற்பத்தியாகக் கூடிய அதே அளவு மின்சாரத்தை எண்ணூரி லுள்ள மின்சார நிலையத்தை விரிவுபடுத்துவதன் மூலம் உற்பத்தியாக்க லாம, செலவு குறைக்கப்படும், அதற்கான திட்டத்தைத் தீட்டலாம என்று அவர்கள் யோசனை கூறியிருக்கிறார்கள். எண்ணூரில் 110 மெகவாட் கூடுதலாக்குவதற்கான முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. மொத்தத்தில் தமிழகத்தைப் பொறுத்த வரையிலே உற்பத்தி அளவு குறையப் போவது என்பது இல்லை. தேவைப்படுகிற அளவு மின்சாரத்தை எண்ணூரிலேயே உற்பத்தி செய்துகொள்ளலாம் என்று அவர்கள் யோசனை கூறியிருக்கிறார்கள். ஆகவே, தூத்துக்குடி அல்லது அந்தப் பகுதியில் மின்சாரம் கிடைப்பதில் எந்தத் தட்டுப்பாடும் ஏற்படுவதற்கு வழி இருக் காது.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, இந்த மின்சாரத் தட்டுப் பாடு ஏற்படுவதனால், கடந்தகால அரசு ஹொகனகல் நீர் மின்சாரத் திட்டத்தை அமுல் நடத்த இருந்தார்களே. அந்தத் திட்டம் இப்பொழு தும் இருக்கிறதா, அது என்ன ஆனது என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படுகின்ற சூழ்நிலை இல்லை. ஹொகனகல் திட்டம் வேறு மாநிலத்தோடு பேச்சு வார்த்தை மூலம் முடிவு செய்ய வேண்டியதாக இருக்கிறது. அது பற்றி பல முறை மன்றத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. மைசூர் மாநில அரசும் தமிழ்நாடு அரசும், அதிகாரிகள் மட்டத்தில் பேச்சு வார்த்தைகள் நடந்த பிறகு அதன் விளைவாக அமைச்சர்கள் மட்டத்தில் நடக்க வேண்டும். அதில் நீர்ப்பாசன மும், மின்சார உற்பத்தியும் சேர்ந்திருக்கிறது. அந்த வகையில் பேச்சு வார்த்தைகள் நடத்த முறைப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. எஸ். அக்னிராஜு : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் சமயநல்லூர் அனல் மின்சாரத் திட்டத்தை விஸ்தரிக்க எண்ணம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது இல்லை.

DR. H. V. HANDE : Will the Minister tell us the total requirement of power in M.W. for our State in the current year, whether we are producing more than what we require and, in view of the fact that we are now having negotiations with a neighbouring State to get power, whether it is cheaper to buy power or to invest money and produce power, and which is the plant from which we are likely to produce power immediately ?

1968 மார்ச் 6]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது மூன்றாவது திட்ட இறுதியிலே 1,370 மெகவாட் மின் திறன் உற்பத்தியாகக் கூடிய கூறுகள் இருக்கின்றன. அதிலிருந்து நாம் 843 மெகவாட் பெற்றுக் கொண்டு வருகின்ற சூழ்நிலை இருக்கிறது. பகல் இரவு இரண்டு வேளைகளில், பகலில் அதிகமாகப் பயன்படுத்தும் சூழ்நிலையும், இரவுக் காலங்களில் குறைவாகப் பயன்படுத்தும் சூழ்நிலையும் இருக்கிறது. ஆனாலும் கபாஸிடி 1,370 மெகவாட் ஆக இருந்தாலும், பயன்படுத்தும் அளவு 843 மெகவாட்டாக இருக்கிறது. மைசூரிலிருந்து பெறுகிறோம் என்றால், பேசின் ப்ரிட்ஜிலே உற்பத்தியாகும் திறனைக் குறைத்துவிட்டுத்தான் பெறுகின்ற நிலையில் இருக்கிறது. இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இங்கே உற்பத்திச் செலவு ஏராளமாக இருப்பதால், அந்த மாநிலத்திலிருந்து எடுக்கும் வகையில் அவர்களுக்கும் நமக்கும் பயன்படும், இரண்டு வகையிலும் பயன்படுத்துவதில் நலம் இருக்கிறது. அதோடு, நெய்வேலியில் இப்பொழுது 300 மெகவாட் உற்பத்தித் திறன் இருக்கிறது. மேற்கொண்டு 100 மெகவாட் திறன் இன்னும் இரண்டு ஆண்டு காலத்தில் உற்பத்தி செய்து, அதன் பிறகு அது 200 மெகவாட் ஆகி, 600 மெகவாட் திறன் அடைவது நான்காவது திட்ட இறுதிக்குள் வசதியாகும் என்று கருதப்படுகிறது.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, நெய்வேலியில் கிடைக்கக் கூடிய அனல் மின்சாரம் தென்னார்க்காடு மாவட்டத்திற்கு மட்டும் உபயோகிக்கப்படுமா அல்லது மற்ற மாவட்டங்களுக்கும் கிடைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட இடத்தில் கிடைக்கும் மின்சாரம் அந்தப் பகுதிக்கு மட்டும் பயன்படும் என்பதில்லை. எல்லா மாவட்டங்களுக்கும், மற்ற மாநிலங்களுக்கும் கூட இணைக்கப்படலாம். யார் யாருக்கு எங்கே எங்கே தேவையோ அந்த அந்த அளவிற்கு, வாய்க்காலில் நீரைப் பிரித்து விடுவது போல மின்சாரத்தையும் பிரித்து விடுகிறார்கள்.

திரு. எ. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் ஆலோசிக்கப் பட்ட அனல் மின்சாரத் திட்டம் மங்களூருக்கு மாற்றப்பட்டு இருப்பதாகக் கேள்விப்படுகிறோமே, அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மங்களூருக்கு மாற்றப்படவில்லை. எண்ணூருக்குத்தான் மாற்றப்பட்டு, மின் திறன் அதிகமாக உற்பத்தி செய்வதற்கான வழிவகைகள் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி : சார், மின்சார உற்பத்தி அதிகமாக இருந்தும், பம்பு செட்டுகளுக்கு மினசார இணைப்புக் கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுகிறதே. அதைத் தவிர்க்க என்ன ஏற்பாடு ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, காலதாமதம் என்றால், ஒரு பம்பு செட்டுக்கு ரூ. 2,500 செலவாகிறது. ஒதுக்கப்படுகிற பணத்தில், இந்த ஆண்டு மேற்கொண்டு 26,000 செட்டுகள் தருவதாக திட்டம். ஆனாலும், 38,000 அல்லது 39,000 செட்டுகள் வரையில் வழங்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. மின்சார வாரியத்தின் வசதிகள், ஆள்கள் நிலை இவற்றையெல்லாம் பார்த்தால், 50,000 பம்பு செட்டுகள் வரை கொடுக்கக் கூடிய நிலைமைகள் இருக்கின்றன. ஆனால், பணப் பற்றாக்குறை காரணத்தால், 39,000 என்கிற அளவில் ஒதுக்கியிருக்கிறது. பணம் அதிகமாக இருக்குமானால், 50,000 செட்டுகள் வரை கொடுக்கலாம். அதற்காகத்தான், எல்.ஐ.சி. போன்றவர்களிடம் கடன் கேட்டிருக்கிறோம். அவர்கள் கடன் தருவதற்கும், மத்திய சர்க்கார் உதவி செய்தால், அதை விரிவுபடுத்த முயற்சி செய்யலாம்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மின் உற்பத்தி பெருகுவதன் மூலம்தான் பொருளாதார அபிவிருத்தியை உருவாக்க முடியும். நீர்வளம் குறைந்திருக்கும் நம் மாநிலத்தில் அனல் மின் சக்தியைப் பெருக்கும் வகையில் நெய்வேலியில் 1,000 மெகவாட் மின்சாரம் உற்பத்தி செய்யத் திட்டம் தீட்டி அனுப்பப்பட்டதே, அதன் நிலை என்ன ? அது மட்டுமல்ல, மின் உற்பத்தி மாநிலத்தினுடைய பொறுப்பு. ஆகவே, வேண்டும்போது கட்டணத்தை உயர்த்திக் கொள்ளுகிறார்கள். அந்த நிலையில் நெய்வேலியில் உள்ள மின் நிலைய உற்பத்தி நிலையத்தை மத்திய சர்க்காரிடமிருந்து மாநில சர்க்கார் ஏற்றுக் கொள்ள வேண்டுமென வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நெய்வேலியில் உற்பத்தியாகும் மின் திறன் 400 மெகவாட்டிலிருந்து 600 மெகவாட்டாக உயர்த்துவதற்கான சூழ்நிலைகள் இருக்கின்றன. இரண்டு ஆண்டுக் காலத்தில் அது சாத்தியமாக இருக்கும். மேற்கொண்டு மாநிலத்தின் தேவை அதிகமாக இருந்தால், மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டால், ,000 மெகவாட் வரை செல்லக்கூடிய திட்டமும் இருக்கிறது. அதை நிறைவேற்றுவது என்பது தேவையைப் பொறுத்துத்தான் இருக்கிறது. இப்பொழுதே முழு அளவையும் எடுக்கவில்லை; குறைந்த அளவுதான் எடுக்கிறோம் என்கிற நிலை இருக்கிறது. உற்பத்தியாகும் மின் திறனை தமிழக அரசுதான் எடுக்க முடியும் என்று இருப்பதால், தமிழகத்தில் அதைப் பயன்படுத்த முடியும், பயன்படுத்த வேண்டும். அங்கேயிருந்து வேறு பல மாநிலங்களுக்கு இணைப்பதால் மின்சார இழப்பு அதிகமாக ஏற்படும். விலையும் கூடுதலாக ஆகிவிடும். ஆகவே, இப்பொழுது 5·2 காசு நாம் ஒரு யூனிட்டுக்குக் கொடுக்கிறோம், உற்பத்திச் செலவு அதிகமாக இருப்பதால், அதன் விலையைக் கூட்ட வேண்டும் என்று கூறுகிறார்கள். அதைப் பற்றிப் பேச்சு வார்த்தை நடக்கிறது. நமக்குக் கட்டுபடியாகும் அளவிற்குத்தான் நாம் கொடுக்க முடியும். பேச்சு வார்த்தை முடியவில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, சபரிகிரி மின்சாரத் திட்டத்தில் உபரியாகக் கிடைக்கும் மின்சாரத்தை கேரள சர்க்கார் நம் மாநிலத்திற்குக் கொடுப்பதாகச் சொல்லுகிறதே அது சம்பந்தமாக என்ன யோசனை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதைப் பற்றி விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. கே. பி. எஸ். மணி : சார், இந்த மின்சாரத்தை விவசாயிகளுக்கு உபயோகப்படுத்த அதிகச் செலவாகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படி அதிகமாகச் செலவாகும் பணத்தை, மத்திய சர்க்கார் 1958-ம் ஆண்டுக்குப் பிறகு மானியமாகக் கொடுக்கிறோம் என்றார்களே, அப்படி இப்பொழுதும் கொடுக்கப்படுகிறதா அல்லது நம்முடைய ஆட்சி வந்த பிறகு நிறுத்தப் பட்டுவிட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப் பற்றி விவரக் குறிப்பில்லை. தனிக் கேள்வி கேட்க வேண்டும்.

திரு கே. சகாதேவக் கண்டர் : தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் குறைந்த அளவு, 100 மெகவாட்டுக்கும் குறைந்த அளவு உற்பத்தி செய்யக் கூடிய இடங்கள் என்னென்ன உள்ளன ? அப்படியிருக்கும் இடங்களிலும் மின்சார உற்பத்தி செய்ய இனிமேலாவது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, வேறு சிலவற்றை நான்காவது திட்டத்தில் சேர்க்க வேண்டும் என்று இந்திய செண்ட்ரல் வாடர் அண்ட் பவர் கமிஷனுக்கும், ப்ளானிங் கமிஷனுக்கும் நாம் திட்டங்கள் தீட்டி அனுப்பியிருக்கிறோம். அவற்றில் ஒன்று பாமியாறு—பன்னப்புழா திட்டம்.

Pamiyar-Pannapuzha Hydro Electric Scheme in Nilgiris district—capacity 110 M.W., Kadamparai Hydro Electric Scheme in Coimbatore District—Capacity 35 M.W. Naduvattam Diversion Scheme—Capacity 69 million KW hours, Hogenekkal Hydro Electric Scheme, an Inter-State scheme with capacity 800 MW Cholatipuzha Hydro Electric Scheme in Nilgiris District—Capcity 50 MW., Paralayar Hydro Electric Scheme in Kanyakumari district—Capacity 35 MW.

என்ற பல திட்டங்களும் தயாரிக்கப்பட்டு அனுப்பப் பட்டிருக்கின்றன. இன்னும் 10 மெகவாட் அளவில் இருக்கும் திட்டங்களைக் கூட எடுக்க வேண்டும் என்று அதற்காகப் பரிசீலனையில் இருக்கும் திட்டங்கள்—

1. Upper Thambaraparani Hydro Electric Scheme, 155 M. W.
2. Upper Manimuthar Hydro Electric Scheme, 95 MW.
3. Suruliar Hydro Electric Scheme, 25 MW.
4. Upper Amaravathi Hydro Electric Scheme, 70 MW.
5. Coonoor-Kallar Hydro Electric Scheme, 100 MW.
6. Lower Cauvery and Lower Moyar Scheme—150 and 70 MW.

இந்தத் திட்டங்களெல்லாம் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் அல்லது ஐந்தாவது திட்டத்தில் பயன்படும் அளவுக்கு அமைக்கலாம் என்ற யோசனை இருக்கிறது. இவைபற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆராய்ச்சிக்குப் பிறகு வேறு வழியே இல்லை என்றால், 10 மெகவாட் கிடைக்கக்கூடிய அத்தகைய நீர் நிலை மின்சார உற்பத்தித் திட்டங்களை அமுல் படுத்துவது பற்றி முயலலாம்.

திரு. ந. தருமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, மின் சக்தி உற்பத்தி செய்ய வசதி வாய்ந்த இடம் என்பதை எந்த அடிப்படையில் நமது அரசு தேர்ந்து எடுக்கிறது ? தஞ்சை மாவட்டத்தில் நாகப்பட்டினம், வேதாரண்யம் பகுதியில் மின் சக்தி நிலையம் அமைப்பதற்கான செயற் குறிப்பு ஏதாவது உள்ளதா ? முற்பகல் 9·30

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மின்சாரம் உற்பத்தி செய்வதில் ஒன்று நீர்வீழ்ச்சியின் திறன் சக்கரங்களைச் சுழற்றுகிற அளவுக்கு வேகமாக உள்ள நீர் வீழ்ச்சி இருக்க வேண்டும். இல்லை, தர்மல் ஸ்டேஷனில் நிலகரியை பயன் படுத்தி அனல் மின்சாரத்தை உருவாக்க வேண்டும். அதற்கு நிலக்கரி கிடைக்கும் இடமாக இருக்க வேண்டும். இப்படி இந்த இரண்டும் வேதாரண்யம் பகுதியில் இருப்பதாகத் தெரியவில்லை. கடல் அலைகளின் வேகத்தினால் பெறவேண்டும் என்றால் சுமார் 20 அடி உயரத்திற்கு எம்பி விழுகின்ற அலைகள் உள்ள இடத்தில் மின் நிலையம் ஆரம்பிக்கலாம். ஆனால் நம் மாநிலத்தில் 4, 5, 6 அடி உயரத்திற்கு மட்டுமே எம்பி விழுகின்ற அலைகளை வைத்து மின் சக்தி உற்பத்தி செய்யக்கூடிய வழி இல்லை. வேதாரண்யம் பகுதியில் இந்த இரண்டு வகைகளிலும் வைக்க வழியில்லை எனபதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : Sir, whereas it is commonly believed and felt that the Madras Government are not taking enough power from the Neyveli Project simply because it is a Central Project and whereas even though it is available at a cheaper rate we have entered into a contract with the Mysore Government to take the power generated from that State, do the Government

believe that the Neyveli Project will continue to generate more energy and that there will be no possibility of closing down this Project. Also, will the Government think of utilising the entire power generated in the Neyveli Project ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலில் குறிப்பிட்டபடி, குளிர் காலத்தில், மழைக் காலத்தில் குறைந்து விடுகிற சூழ்நிலை வரும்போது இங்கே இருக்கின்ற வாய்ப்புகள் அனைத்தையும் பயன் படுத்துக் கொண்டு இங்கே இருக்கிற மின் சக்தியை எடுக்காமல் இருந்து விட்டார்கள். நான் பிறகு தலையிட்டு, நெய்வேலி இந்த மாநிலத்தை நம்பி இருக்கின்ற காரணத்தாலும், வேறு எந்த மாநிலத்திற்கும் இங்கிருந்து செல்ல முடியாத காரணத்தாலும், இங்கிருக்கும் சக்தியை பூராவாகப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று பேஸின் பிரிட்ஜ் அனல் நிலையத்திலிருந்து குறைத்து விட்டு அந்த நிலையத்திலிருந்து பெற நினைத்தால் உற்பத்திக்காகும் செலவு போக மிச்சப்படுவதைக் கணக்கிட்டு இவ்வளவிற்குக் குறையாமல் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று ஒப்பந்தம் ஆகி இப்போது எந்த வித இடையூறும் இன்றி உற்பத்தி ஆவதை எடுத்துக்கொள்ளும் சூழ்நிலை ஏற்படுகிற அளவிற்கு விரிவு படுத்த தேவைப்படுகிற அளவில் வருகிறபோது அவ்வப்போது அதைப் பெருக்கிக் கொள்ளும் திட்டத்தை மேற்கொள்ளுமாறு வற்புறுத்தலாம்.

திரு. தி. பொன்னுமலை : தலைவர் அவர்களே, தண்ணீரின் ஆவியிலிருந்து கரண்ட் எடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அப்படித் தண்ணீர் ஊற்றுகிறபோதே, விவசாயிகள் ஒவ்வொருவரும் பம்பு செட்டுகள் வைத்து இறைக்கிற இடங்களில் ஆங்காங்கே சிறு மெஷின்கள் வைத்து அந்த ஆவியிலிருந்து கரண்ட் எடுக்கலாமே ; ஒரு 10 ஹார்ஸ் பவர் மோட்டார் இருக்கிற தென்றால் எங்கு எவ்வளவு கரண்ட் செலவாகிறதோ அதை மெஷின்கள் வைத்து ஆவியிலிருந்தே அந்தக் கரண்டை எடுக்கலாமே. வெளி நாடுகளில் இதுபோன்று செய்யப்படுவதாகத் தெரிகிறது. ஆகவே, கிணறுகளில் உள்ள தண்ணீரிலிருந்து அதை ஆவியாக்கி தேவையான கரண்டை எடுப்பதற்கு ஏதாவது ஒரு ஏற்பாட்டைச் செய்ய உத்தேசம் ஏதாவது இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் மின்சார அமைச்சரே தவிர மின்சார இன்ஜினியர் அல்ல. ஆகவே, உறுப்பினர் அவர்கள் யோசனையை எழுதி அனுப்பினால் மின்சார இலாகா இன்ஜினியர்களிடம் அனுப்பி அது நடைமுறைக்கு வருமா வராதா என்று பார்க்கலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : சார், கன்னியாகுமரி ஜில்லாவில் மணவாளக் குறிச்சி என்ற பிரதேசத்தில் மோனேசைட், இல்மினைட் போன்ற மணல்கள் தாராளமாகக் கிடைக்கின்றன. இவற்றால் அணுமின் சக்தி உற்பத்தி செய்யலாம் என்று கருதப்படுகிறது. ஆகவே, அந்தப் பிராந்தியத்தில் ஒரு அணு மின் சக்தி உற்பத்தி நிலையம் அமைக்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஏற்கனவே நமது மாநிலத்தில் கல்பாக்கத்தில் அணுமின் நிலையம் உற்பத்தி செய்வதற்குத் திட்டமிட்டு அதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. முதலிலே 200 மெகாவாட் அளவுக்கு உற்பத்தி தருகின்ற அளவுக்கு அங்கே பொறிகள் பொருத்தப்பட்டு, பிறகு 400 மெகாவாட் அளவுக்குப பெருக்குவதற்கும் திட்டம் போட்டிருக்கிறார்கள். தேவைப்பட்டால் மேலும் பெருக்கலாம், என்று அணுசக்தி கமிஷன் தலைவர் அவர்களும் கூறி இருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் அணு மின்சக்தி உற்பத்தி செய்வதற்கான

1968 மார்ச் 6]

பொருள்கள் கிடைத்தாலும், அந்தப் பொருள்கள் எல்லாம் இந்த மின் சக்தி நிலையத்தில் பயன்படுத்திக் கொள்ளப் போதுமான அளவுக்கு இருக்கும். மேலும், ஒரு மாநிலத்தில் ஒரு அணு மின் நிலையம் தான் வைக்க முடியும். அதை கல்பாக்கத்தில் வைத்து விட்டால் 100 கோடி ரூபாய் அளவில் செலவாகும். அது ஏற்படுத்தப்பட்டு வருகிறது. ஆகவே, இன்னொரு அணு மின் நிலையம் வைக்கும் வாய்ப்பு இப்போது ஏற்படாது. அப்படித் தேவைப்பட்டால் இதை தூத்துக்குடிப் பகுதியில் வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தச் சமயத்தில் இதைத் தூத்துக்குடியில் வைக்கலாமா அல்லது கன்னியாகுமரியில் வைக்கலாமா என்பதுபற்றி யோசித்துக்கொள்ளலாம்.

திரு. அ. அலடி அருணா : தலைவர் அவர்களே, பழைய அரசு எந்த அடிப்படையில் எவ்வளவு விலைக்கு மின்சாரத்தை கர்நாடக மாநிலத்தில் இருந்து விலைக்குப் பெற்றார்கள் ? இப்போது இருக்கின்ற தமிழக அரசு எந்த அடிப்படையில் ஏற்பாடு செய்திருக்கிறது ? மேலும் தொழில் வளர்ச்சிக்கு அனுகூலம் அளிக்க வேண்டும் என்பதற்காக பெரிய தொழிற்சாலைகளுக்குக குறைந்த கட்டணத்தில் மின்சாரம் கொடுக்கிறதை நிறுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முன்பு இருந்த சூழ்நிலையைப் பொருத்து விலைகள் அமைய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அப்பொழுது நமக்கு மின்சாரம் தேவைப்பட்டது, மின்சாரம் மிகவும் பற்றாக்குறையாக இருந்தது. மைசூர் மாநிலத்தில் ஓரளவுக்கு மிச்சப்படுகிற நிலையும் இருந்தது. நம்முடைய நெருக்கடி நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, நமக்கு இருக்கும் தேவையை அறிந்து கொண்ட சூழ்நிலையில் யூனிட் ஒன்றுக்கு 9 காசு என்ற அளவுக்கு அவர்கள் தந்து கொண்டிருந்தார்கள். இப்போது அங்கே ஐராவதி திட்டம் நிறைவேற்றப்பட்டு ஏராளமான மின்சாரம் உற்பத்தியாகி அதை யாரும் பயன் படுத்தாமல் விட்டால் அதன் காரணமாக உற்பத்தியாவது வீணாகத் தான் ஆக வேண்டும். அந்த சூழ்நிலை அவர்களுக்கு ஏற்பட்டு நமக்கும் ஓரளவு சமாளித்துக் கொள்ளலாம் என்ற நிலை வந்தவுடன் நாமும் கொஞ்சம் மெதப்பில் இருந்தோம். அவர்கள் கொஞ்சம் இறங்கி வந்து எப்படியாவது எடுத்துக் கொண்டால்தான் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்று அவர்கள் ஓரளவிற்கு இறங்கி வந்தார்கள். அவர்கள் இன்னும் கொஞ்சம் இறங்கி வரட்டும்—யாரும் மின்சாரத்தை எடுத்துக்கொள்ளாவிட்டால் அவர்களது உற்பத்தி பாழ் ஆகிவிடும்—நாட்டுக்கும் நிலக்கரி மிச்சப்படும், என்று எண்ணினோம். அப்படி ஒரு வாய்ப்பு ஏற்பட்டதால் முன்பு 9 காசுக்கு வாங்கியது இப்போது ஒரு மில்லியன் வரையில் 5 காசு என்றும் அதற்கு மேல் $4\frac{1}{2}$ காசு என்றும் எடுத்துக் கொள்ள வகை செய்யப்பட்டிருக்கிறது. அது கட்டுப்படியாகும் சூழ்நிலை இருக்கிறது. பண்ட மாற்றில் ஏற்படும் கிராக்கியைப் பொருத்து விலை நிர்ணயம் ஏற்படுகிறது. அப்போது 9 காசுக்கு வாங்கியது இப்போது $4\frac{1}{2}$ காசுக்கு வாங்கியும் இன்னும் குறையாதா என்று பார்த்தோம். நாம் $3\frac{1}{2}$ காசில் இருந்து துவங்கி $4\frac{1}{2}$ காசு என்ற அளவில் வந்தது. இது நமக்குக் கட்டுப்படியாகக் கூடிய அளவிலேயே இருக்கிறது.

திரு அ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, மின்சார சக்தி போதுமான அளவுக்கு இருந்தும் மின்சாரத்தைக் கொடுப்பதற்கு போதிய சாமான்கள் இல்லாத காரணத்தால் மின்சாரம் வழங்குவதில் தடை ஏற்படுகிறது என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆகவே, சாமான்களை உடனடியாகக் கொடுப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்க சர்க்கார் ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : முதலிலேயே சொல்லி இருக்கிறேன். பணம் பற்றாக்குறைதான் என்று. ஒதுக்கப்படுகிற பணத்தில் இருந்து எந்த அளவுக்கு செய்யமுடியுமோ அந்த அளவுக்கு வேண்டியதைச் செய்கிறார்கள். கடன் வசதிகளும் மற்றவைகளும் வருமானால் சாமான்களோடு மின்சாரத்தை விரிவு படுத்துவதற்கான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. வை. சுவாமிநாதன் : திருச்சி, தென் மதராஸ் எலெக்ட்ரிக் சப்ளை கார்ப்பரேஷனை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் உத்தேசம் உண்டா? இந்த அனல் மின்சாரத்திற்குத் தேவையான பொருள்கள் நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றனவா? அல்லது வேறு நாடுகளிலிருந்து வரவழைக்கப்படுகின்றனவா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தனியாரிடத்திலிருக்கும் மின்சார நிறுவனங்களை மெல்ல மெல்ல எடுத்துக்கொள்ளுவது என்ற திட்டம்தான். படிப்படியாக இப்பொழுது தஞ்சை மாவட்டத்தில் மூன்று நிறுவனங்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்ற நிலைமைகள் இருக்கின்றன. அதுபற்றிய நிலைமை களெல்லாம் முடிந்ததற்குப் பிறகு, படிப்படியாக வரும்போது, திருச்சி போன்ற மற்றவைகளையும் எடுத்துக் கொள்ளுவதற்கான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும். இப்பொழுது தஞ்சையில் இருக்கும் நிறுவனங்களை எடுத்துக்கொள்ளுகிற சூழ்நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. அதுபற்றியும் இப்பொழுது "ரிட்"-க்குப் போயிருக்கிறார்கள். அதுபற்றி முடிவு தெரிந்ததற்குப் பிறகு, அதற்கான நடவடிக்கைகளில் நாம் முற்பட வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 154, 155 எண்களுள்ள வினாக்கள் தள்ளி வைக்கப்படுகின்றன. இப்பொழுது 156 எண்ணுள்ள வினா எடுத்துக்கொள்ளப்படும்.

வேளாண்மைத்துறை அதிகாரிகள்

*156 வினா.—திரு. கரு. சீமைச்சாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய இலாகாவில் சொந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்களை அதே மாவட்டத்தில் கெஜட் பதிவுள்ள அதிகாரிகளாக நியமிக்கப்படக் கூடாது என அரசாங்கம் விவசாய நெறியாளருக்கு ஏதேனும் உத்தரவு பிறப்பித்துள்ளதா?

(இ) ஆம் என்றால் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) இல்லை.

(இ) எழவில்லை.

மகளிர் கூட்டுறவு பண்டகசாலைகள்

*157 வினா—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு சட்டக் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராஜ்யத்தில் எத்தனை மகளிர் கூட்டுறவு பண்டகசாலைகள் இயங்கி வருகின்றன?

(இ) மேலும் மகளிர் கூட்டுறவு பண்டகசாலையை ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் அரசினரின் பரிசீலனையிலுள்ளதா?

(உ) ஆமெனில், அவைகளுள் தஞ்சை மாவட்டத்தில் எத்தனை இடம் பெறும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இருபத்தாறு.

(இ) இல்லை—எந்தப்பகுதியிலும் மகளிர் கூட்டுறவு பண்டகசாலை ஏற்படுத்துவதற்கான சூழ்நிலை ஏற்பட்டு, சம்பந்தப்பட்டவர்கள் பண்டகசாலையை ஆரம்பிக்க முன்வந்தால் இதுபற்றிக் கூட்டுறவு பதிவாளர்கள் கவனிப்பார்கள்.

(உ) இக் கேள்விக்கு இடமில்லை.